உரிமைப்பிரச்சினை.
(அ) மக்கள் குரல்நாளேடு மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் மக்கள் குரல் நாளேட்டின் மீது ஒருஉரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குறுக்கீடு). தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர வர்கள் உட்காரலாம். திரு. அப்துல் லத்தீப் உட்காரலாம். திரு. சி. கோவிந்தராஜன் தொடரலாம். (தொடர்ந்து திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நின்று கொண்டிருந்தார்). திரு. கோவிந்தராஜன் அவர்கள் பேசுங்கள். (மேலும் சில உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்). திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் தொடர லாம் ; மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். திரு. அப்துல் லத்தீப் கவனிக்க வேண்டும். நீங்கள் உட்காரவில்லை என்றால் நான் இன்னும் ஒரு படி மேலே போக வேண்டியிருக்கும். அது அவ்வளவு நல்லதல்ல. நீங்கள் உட்காரலாம். இப்போது, திரு. சி. கோவிந்தராஜன்.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே மக்கள் குரல் நாளேடு சென்னை 28-4-1989, வெளியூர் 29-4-1989 இதழில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது. ‘‘ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத்தில் சந்தர்ப்பவாத போக்கில் செயல்படுகிறது என்றும், மேல் சபையைத் திரும்ப ஏற்படுத்துவது பற்றி தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டனர் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறி இருக்கிறது’’ என்று எழுதப்பட்டு இருக்கிறது. இந்த சமயத் தில் இது எப்படி உரிமை மீறல் ஆகும் என்பதை எடுத்துக் கூறுவதற்கு ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். முதலில் கம்யூனிஸ்ட் கட்சி சந்தர்ப்பவாதப் போக்கில் போய்க் கொண்டிருக்கிறது என்பது எங்களுடைய கட்சியின் மீது வேண்டுமென்றே களங்கம் கற்பிப்பதற்காக எழுதப்பட்ட வாக்கியமாகும். எங்கள் கட்சி எங்களுடைய கொள்கையின் பிரகாரம்தான் நடந்து கொண்டிருக்கிறதே தவிர, கொள்

கையை விட்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் சந்தர்ப்பவாத அடிப்படையில் போவதில்லை என்பதை இங்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன். இப்படிக் கூறுபவர்கள்தான் சந்தர்ப்பவாத அடிப்படையில் எழுதுவதும், சந்தர்ப்பவாத அடிப்படையில் பேசுவதுமாக இருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருகாலத்தில் கல்கி அவர்கள்....

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதிலே உரையாற்ற வேண்டாம். அது என்ன உரிமை மீறல் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லுங்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : அன்றைக்கு இந்த மேல்சபை இங்கு கொண்டு வரப்பட வேண்டுமா, வேண்டாமா என்ற விவாதம் வந்த பொழுது, இங்கே கூறப்பட்டிருப்பது, கம்யூனிஸ்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உறவு கொண்டிருப்பதன் காரணமாக, சந்தர்ப்பவாத அடிப்படையில், இந்தத் தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டனர் என்று இதிலே எழுதப்பட்டிருக்கிறது.

நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். அன்றைய தினம் இங்கே நாங்கள் வந்து கலந்து கொண்டு, எங்களுடைய கட்சியினுடைய கருத்தையும், எங்களுடைய கொள்கைத் திட்டத்திலேயே மேல்சபை தேவை இல்லை என்று அறிவித்திருப்பதையும் எங்களுடைய அணியினுடைய தலைவர் இங்கே எடுத்துக்கூறி, அதற்குப் பிறகு விவாதம் நடந்து முடிந்த பிறகு, இதற்கான ஓட்டெடுப்பு வந்த காலத்தில்தான் நாங்கள் மீண்டும் இந்த நிலையை வலியுறுத்திவிட்டு எங்களுடைய அணித் தலைவர் எடுத்துக் கூறிய பிறகு, வெளிநடப்புச் செய்தோமே தவிர ஸபைக்கு வராமலேயே இருந்தது என்பது இல்லை.

அன்றைய தினம் மக்கள் குரல் பத்திரிகையின் நிருபரும் இங்கே நிச்சயமாக இருந்திருப்பார் என்று நான் கருதுகிறேன். உண்மை இவ்வாறிருக்க, இதைத் திரித்துக் கூறி, நாங்கள் சந்தர்ப்பவாதப் போக்கில் செல்வதாக எழுதியுள்ளார்கள். மேலும் நாங்கள் இங்கே வந்து கலந்து கொண்டு,

எங்களுடைய நிலையைச் சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்தோமே தவிர நாங்கள் வராமலேயே இருந்துவிட்டோம் என்று, எங்களுடைய கட்சியைக் களங்கப்படுத்துவதுபோல, மாசு படுத்துவதுபோல, திரித்துக் கூறுவதும், உண்மைக்குப் புறம்பாக எழுதுவதும் இந்த அவையினுடைய உரிமையை மீறக் கூடிய குற்றமாகும் என்று நான் இங்கே கூற பிரியப்படுகிறேன்.

''ஒரு காலத்தில், கல்கி அவர்கள் கூறினார்கள் கம்யூனிஸ்ட்டுகள் கோட்டையை விட்டாலும் விடுவார்களே தவிர, கொள்கையை விடமாட்டார்கள்'' என்று எனவே நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்ல, எங்களுடைய கொள்கையை எடுத்துச் சொல்லி விட்டு நாங்கள் வெளிநடப்பு செய்தோம்.

நடக்காத ஒன்றை நடந்ததாகக் கூறி, இப்படி எழுதியிருப்பது இந்த அவையினுடைய உரிமையை மீறக்கூடிய செயலாகும் என்று கூறி, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து நாளேட்டின் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டு, பின் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

என்னிடத்திலே இசைவு கேட்டபடி திரு. கோ. பூவராகன்.

2. தகவல் கோரல் தொடர்பு

(இ) நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களைக் கொடுத்தவர்களுக்கு நிவாரணம் அளித்தல்

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடங்களையெல்லாம் எடுத்த மக்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலே இருந்து, அவர்களுக்காக நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம், அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி, அவர்களுக்கு வீட்டுமனை வழங்கவும் அவர்கள் நிலங்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கவும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கவும் என்று அங்குள்ள அது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS